**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

திருவிவிலியத்தை நடுவில் அரியணையேற்றி வைத்து ஒளி - தூபம் - மலர்களை ஒரே தட்டில் வைத்து - இறைவார்த்தை அஞ்சலிக்கான தெரிந்த பாடல் ஒன்றைப் பாடி ஒருவர் அஞ்சலி செய்தல். எல்லாரும் எழுந்து நின்று "கனிவான கட்டளைகளைத் தருகின்ற கடவுளின் வார்த்தைகளைத் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறோம்" என்று ஆசிரியர் சொல்ல மாணவர்கள் பின்தொடர்ந்து சொல்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

1 அரசர்கள் 3:1-28

**8. இறைவார்த்தை விளக்கம்**

★ தாவீதுக்குப் பின் அவர் மகன் சாலமோன் அரசரானார்.

★ சிபயோன் என்ற மிக மேடான இடத்தில் ஆயிரம் எரிபலிகளைச் செலுத்தினார்.

★ கனவில் தோன்றிய கடவுள் சாலமோனிடம் "உனக்கு என்ன வரம் வேண்டும். கேள்' என்றார்.

★ சாலமோன், "கடவுளின் மக்களை வழிநடத்த எனக்கு ஞானம் நிறைந்த உள்ளம் வேண்டும்" என்றார்.

★ சாலமோன், நீடிய ஆயுளையோ, செல்வத்தையோ எதிரிகளின் சாவையோ கேட்காமல் ஞானத்தைக் கேட்டார். இது கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது.

★ சாலமோன் கேட்டபடியே ஞானத்தையும், புகழையும், செல்வத்தையும் கடவுள் அவருக்குக் கொடுத்தார்.

★ "இஸ்ரயேலில் சாலமோனைப் போன்று எக்காலத்திலும் ஞானமுள்ள அரசர் இருக்க மாட்டார்கள்" என்று கடவுள் கூறினார்.

★ கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்கள் எல்லா நலன்களையும் பெற வழிநடத்துவது ஞானம்.

★ ஆண்டவர் மேல் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்.

**9. உய்த்துணரச் செய்தல்**

❖ கடவுளிடம் ஞானத்தைக் கேட்பேன்.

❖ மற்றவர்களுக்கு உதவிபுரியும் அறிவையும் ஆற்றலையும் கடவுளிடம் கேட்பேன்.

## பாகம் - 2 கலை வழிப் பயிற்சி

**1. விளையாட்டு**

**பொருள்**: 2 குழந்தைப் பொம்மைகள் **நபர்கள்**: 10 அதற்கு மேல்

அனைவரும் வட்டமாக நிற்க வேண்டும். இரண்டு குழந்தைப் பொம்மைகளில் ஒன்று உண்மையானக் குழந்தை எனவும் மற்றொன்றைப் போலியான குழந்தை எனவும் குறிப்பிடவும்.



நடுவர் ஊதல் ஊதியவுடன் இரண்டு பொம்மைகளை எதிரெதிர் திசையில் ஒருவர் மாற்றி ஒருவர் கொடுக்க வேண்டும். நடுவர் மீண்டும் ஊதல் ஊதுவார். ஆட்டம் நிறுத்தப்படும். யார் கையில் உண்மையான குழந்தைப் பொம்மை இருக்கிறதோ அவரே உண்மையான தாய் எனப் பாராட்டப்படுவார். போலியானக் குழந்தைப் பொம்மை யாரிடம் உள்ளதோ அவர் போலியானத் தாய் என விளையாட்டை விட்டு வெளியேற்றப்படுவார். பின்பு ஆட்டம் தொடரும்.

**2. பாடத்திற்குப் பொருத்தமான பழமொழிகளைத் தேர்ந்தெடு**

1. அன்புக்கு அரக்கனும் அடிபணிவான் **(அன்பு செய்)**
2. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா **(வீரம்)**
3. எறும்பு ஊரக் கல்லும் தேயும் **(முயற்சி)**
4. சங்கு சுட்டாலும் வெண்மை தரும் **(வெள்ளை உள்ளம்)**
5. அகல உழுவதை விட ஆழ உழு **(உழைப்பு)**
6. சோம்பேறி சோளவிதை **(சுறுசுறுப்பாயிரு)**

**3. 'அ' பகுதியில் உள்ள எழுத்திற்கு 'ஆ' பகுதியில் உள்ள எழுத்துக் களை எடுத்து பொருத்துக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தா | வா | ஐ | பெ | நா | பா | நீ | ப |
| லி | தி | ல் | ள் | யோ | ண் | ள் | ய் |

**விடை**

**1. தாய் 2. வாள் 3. ஐயோ 4. பெண் 5. நாள் 6. பால் 7. நீதி 8. பலி**

**4. வில்லுப்பாட்டு**

**குரு** : வந்தனமுங்க வந்தனம்
வந்த சபையாரே குந்தனும்
அல்லி மலரெடுத்து ஆண்டவன கும்பிட்டோம்
மல்லி மலரெடுத்து மாலை போட்டு கும்பிட்டோம்
சாமந்தி மலரெடுத்து மாலை போட்டு கும்பிட்டோம்
வந்தனமுங்க வந்தனம் வந்த சபையோரே குந்தனும்

**சிஷ்யன்** : குருவே... என்ன இவ்வளவு கூட்டம்

**குரு** : சிஷ்யா... நாம வில்லுப்பாட்டு பாடப்போறோம்... அதப் பார்க்கத்தான் இவ்வளவுக் கூட்டம்.

**சிஷ்யன் 2** : குருவே இன்னிக்கி யாரப் பத்திப் பாடப்போறோம்.

**குரு** : மடையா... இர்றேண்டா... முந்திரிக் கொட்ட மாதிரி முந்திக்கிறே.

எட்டாம் நாள்

# 8. யூதித்து

**பாகம் - 1 பாடப் போதனா முறை**

## இறைவார்த்தை

யூதித்து 8:2-8, 9:1-14, 13:1-20

*(இந்த இறைவார்த்தைப் பகுதிகளை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

## இறைச்செய்தி

- ஒருவர் கடவுள் மீது பற்றுறுதி கொண்டு செயல்பட்டால், எத்துணை வலிமை படைத்த உலக ஆற்றல்களையும் வென்று விடலாம்.
- நோன்புடன் கூடிய செபம் கடவுளின் ஆற்றலைப் பெற்றுத் தருகிறது.
- இஸ்ரயேலைக் காப்பாற்ற யூதித்து என்ற பெண் மூலம் கடவுள் வெற்றியைக் கொடுத்தார்.

## மனநிலை

- நோன்பிருந்து செபித்தால் இறைவன் வல்லமையுடன் வழி நடத்துவார்.
- யூதித்தைப் போல கடவுளின் மகிமைக்காக, பிறர் நலனுக்காக நற்செயல் செய்ய முன் வருவேன்.

### 1. தொடக்கச் செபம்

***பாடல் :*** *ஆற்றலாலும் அல்ல*

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

பாஸ்கர், ஜெஸி இருவரும் ஒரே பள்ளியில் 10ஆம் வகுப்பு படித்து வந்தனர். ஜெஸி கடவுள் பக்தி மிக்கவள். எந்தச் செயலையும் செபத்துடனே செய்வாள். பாஸ்கர் நன்றாக படிப்பான். ஆனால் அவனிடம் கடவுள் மீது நம்பிக்கை இல்லை. ஆண்டு இறுதித் தேர்வு வந்தது. இருவரும் தேர்வு எழுதினர். பாஸ்கரை விட ஜெஸி அதிக மதிப்பெண் பெற்று மாவட்டத்தில் முதல் இடம் பிடித்தாள். செபம்தான் அவள் முதல் இடம் பெற உதவியது என்று அனைவரும் பாராட்டினார்கள்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ஜெஸி என்ன குணநலன் உடையவள்?
- அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றது யார்?
- செபத்தால் நீங்கள் பெற்ற வெற்றி என்ன?



### 4. வாழ்க்கை மதிப்பீடு

வாழ்வில் பெறுகின்ற வெற்றி நமது சொந்தத் திறமையால் அல்ல; மாறாக, கடவுளின் அருளாலும் இரக்கத்தாலுமே பெறுகிறோம்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

யூதித்து என்ற கைம்பெண் மூலம் கடவுள் இஸ்ரயேலுக்குக் கொடுத்த வெற்றியை இன்று படிப்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

ஆசிரியர் திருவிவிலியத்தை உயர்த்திப் பிடித்துக்கொண்டு “இதோ வாழ்வுதரும் இறைவனது வார்த்தை. வாரீர் அஞ்சலி செய்வோம்” என்பார். அவரவர் இடத்தில் இருந்துகொண்டே முன்குறிக்கப்பட்ட சிலர் மலர்கள் தூவுவர். சிலர் ஊதுவத்தி புகையைக் காட்டுவர். சிலர் எரியும் மெழுகுத்திரிகளை உயர்த்திக்காட்டுவர்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

யூதித்து 8:2-8, 9:1-14, 13:1-20

### 8. இறைவார்த்தை விளக்கம்

- யூதித்து மெராரியின் மகள். மனாசே என்பவர் இவரது கணவர்.
- யூதித்தின் கணவர் மனாசே உயிர்துறந்ததால் யூதித்து, கைம்பெண் ஆனார்.
- நோன்பிருந்து செபித்து, எவருடைய குறைச் சொல்லுக்கும் ஆளாகாமல் யூதித்து வாழ்ந்து வந்தார்.
- அசீரிய அரசர் நெபுகத்னேசர் என்பவரின் படைத்தலைவர் ஒலோபெரின்.
- இவன் இஸ்ரயேலரின் பெத்தானியா என்ற நகரை முற்றுகையிட்டான்.
- யூதித்து பக்தியுள்ள பெண், கடவுளின் கட்டளைகளை அனுசரித்தவர், செபத்தில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர். கடவுளையே நம்பி வாழ்ந்தவர்.
- கடவுளின் துணையோடு ஒலோபெரின் முற்றுகையிலிருந்து விடுவித்து இஸ்ரயேல் மக்களைக் காத்தவர்.
- அன்னை மரியாவின் முன்னோடியாக இவர் போற்றப்படுகிறார்.

### 9. உய்த்துணரச் செய்தல்

- கடவுள் மேல் முழு நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் எல்லா ஆற்றல்களையும் பெற்று வெற்றி பெறலாம்.

## பாகம் - 2 கலை வழிப் பயிற்சி

**1. பாடல்**

**நீங்களே இராகம் போட்டுப் பாடுங்களே!**

சின்ன சின்ன தம்பிகளே வாருங்க
சின்ன சின்ன தங்கைகளே கேளுங்க - 2

ஓ ... ஓ ... ஓ ... ஓ ...

யூதித்துக் கதை தான்
கேட்பீரே . . . கேட்பீரே . . .

1. யூதித் தென்ற அழகு சுந்தரி
   பெண்மணியைப் பாருங்க - அவ
   செல்வமிக்க குடும்பத்திலே
   இருந்த கைம்பெண் தானுங்க
   டன்டனக்கா நக்கா நக்கா - 2
   இஸ்ரயேல் மக்களை மீட்க வந்த பெண்ணுங்க - அவ
   தெய்வ பக்தியில் வளர்ந்த
   பொண்ணு யூதித்து மங்கை தானுங்கோ - 2
2. ஒலபெரியின் தாக்குதலால் - இடிந்த
   இறை மக்களை
   வெற்றிப் பெறச் செய்தாயே
   யூதித்தென்ற பெண் உதவியால்
   டன்டனக்கா நக்கா நக்கா - 2
   ஒலபெரியின் தலையைத்தான்
   யூதித்து வெட்டி வீழ்த்தினாள்
   இறைவனுடைய துணையினால்
   எளிதாய் வெற்றி பெற்றாளே - 2

**2. விடுகதை**

1. யூ - வில் தொடங்கி து-ல் முடியும் பெண் எந்த பெண்? **யூதித்து**
2. அழகில் இராணி! அம்சவாணி இளம் விதவை யார்? **யூதித்து**
3. யூதித்து கணவர் இவர்! யோசேப்பு மகனின் பெயர் கொண்டவர். யார் இவர்? **மனாசே**
4. மரம் எரிந்தால் மிச்சமாகும். யூதித்து தலையில் தூவிக் கொண்டது. அது எது? **சாம்பல்**
5. தன் தலைவன் ஒலோபெரின் முன்னிலையில் இருந்த தம் அலுவலர்களை வெளியேற்றியவன் யார்? **பகோவா**
6. ஒலோபெரின் மதி மயங்கினான்; மயங்கி விழுந்தான்! அவனை விழ வைத்தது எது? **மது**
7. ஒலோபெரின் படுக்கையறையில் யூதித்து முதலில் செய்தது என்ன? **செபம்**



8. இது தூண் அருகில் இருந்தது! ஒலோபெரின் உயிரைக் கொன்றது! அது என்ன? **வாள்**
9. உலகில் உள்ள எல்லாப் பெண்களையும்விட நீ உன்னத கடவுளின் ஆசி பெற்றவள்! யார் யாரிடம் கூறியது? **ஊசியா - யூதித்து**
10. மக்களின் மறுமொழி இது! அது எது?

    **அவ்வாறே ஆகட்டும்; அவ்வாறே ஆகட்டும்**

**3. விளையாட்டு (எழுத்து எடுத்தல்)**

தேவையானவர் : 20 பேர்

இந்த எழுத்துக்களை சாட் பேப்பரில் எழுதித் தனித்தனியான அட்டைகளை வைத்திருத்தல். இவைகளை இரு செட் வீதம் வைத்திருத்தல்.

| | | | | |
|---|---|---|---|---|
| ன் | பு | நோ | ஞ் | |
| ச் | ழ் | கி | ம | சி |
| நீ | ங் | க | | |

விளையாடும் முறை: நடத்துனர் 20 பேரை 4 குழுக்களாகப் பிரித்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி வைப்பார். குழுவிற்கு **அ, ஆ, இ, ஈ** எனப் பெயர் கொடுப்பார்.

**நடத்துனர்:** குழு அ என்று சொல்லி அல்லது ஏதாவது ஒரு குழு என்று சொல்லி விசில் ஊதுவார். கூறப்பட்ட குழுவில் இருக்கின்றவர்கள் எழுத்துக்கள் உள்ள இடத்திற்கு ஓடிச்சென்று அதில் நோன்பு என்ற வார்த்தையையும், மகிழ்ச்சி என்ற வார்த்தையையும் எடுப்பார்கள். இதற்கு குறிப்பிட்ட 2 நிமிடமோ (அ) 5 நிமிடமோ கொடுக்கப்படும். அதற்குள் எழுத்துக்களை எடுக்க வேண்டும். நேரம் கடந்துவிட்டால் அக்குழுவினர் வெளியேற்றப்படுவர். அடுத்த குழுவினர்க்கு வாய்ப்பு தரப்படும்.

**4. வாள் வெட்டு விளையாட்டு**

தேவையானோர் : 10 பேர்

விளையாடும் முறை : நடத்துனர் வாள் என்ற சொல்லை சொல்லும் போது அனைவரும் நின்றபடி தனது வலக்கையை (வெட்டுவது போல்) உயர்த்திக் காட்ட வேண்டும்.

வெட்டு என்று சொன்னால் கையை கீழே போட்டுவிட்டு தன் தலையை இடப்பக்கமாகச் சாய்த்து கொள்ள வேண்டும்.

இதை மாற்றி மாற்றிச் சொல்லும் போது சரியாகச் செய்பவரே வெற்றி பெறுவர்.

தவறாகச் செய்பவர் விளையாட்டிலிருந்து நீக்கப்படுவார்கள்.

ஒன்பதாம் நாள்

# 9. பேதுரு

**பாகம் - 1 பாடப் போதனா முறை**

## இறைவார்த்தை

யோவான் 21:1-19

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

## இறைச்செய்தி

- இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின் பேதுரு தலைமையில் சீடர்கள் தங்கள் பழைய தொழிலான மீன் பிடிக்கச் சென்றனர்.
- இயேசு இவர்களுக்கு ஏராளமான மீன்கள் கிடைக்கச் செய்தார்.
- பேதுருவைத் தம் திருச்சபையைத் தலைமை ஏற்று வழிநடத்த இயேசு அழைத்தார்.

## மனநிலை

- இயேசுவே, என் வாழ்வில் எல்லாம். அவரின்றி என் வாழ்வில் வெற்றி இல்லை.

### 1. தொடக்கச் செபம்

எங்கள் அன்பான ஆண்டவரே! உமது திருப்பணியைச் செய்திடப் பேதுருவை மீண்டும் அழைத்தீரே! எங்களையும் உம் பணியைச் செய்ய அழைத்துக் கொள்ளும். ஆமென்

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

அமலி படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவள். ஆனால் மதத்தில் பற்று இல்லாதவள். உயர் படிப்புப் படித்து மருத்துவர் ஆனார். அவளுக்கு மருத்துவப் பணி செய்து பணம் சம்பாதிக்க வேண்டும் என மிகுந்த ஆவல். ஆனால் திடீரென்று ஒரு விபத்து ஏற்பட்டது. காயமடைந்த அவள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். பலர் அவளுக்காகச் செபித்தனர். அவள் தன்னையே மாற்றிக் கொண்டாள். கன்னியர் மடத்தில் சேர்ந்து மருத்துவப் பணி மூலம் இறைத் தொண்டாற்ற முடியும் எனத் தெரிந்து கொண்டாள். அதன்படி அவள் ஒரு துறவியாகி இறைப்பணி செய்தாள்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- அமலியின் ஆசை என்ன?
- இறுதியில் அமலி எப்படி பணியாற்றினாள்?
- இந்நிகழ்வைப் பற்றி உங்கள் கருத்து என்ன?



### 4. வாழ்க்கை மதிப்பீடு

வாழ்க்கையில் நாம் நினைப்பது நடப்பதில்லை. எல்லாம் இறைவனின் செயலே.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

இயேசுவை விட்டு விலகிச் சென்ற பேதுருவை அவர் பெயர் சொல்லி அழைத்து, தம் பணியைத் தொடர்ந்து செய்யப் பணித்த நிகழ்ச்சியை இன்று படிப்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

அலங்கரிக்கப்பட்ட திருவிவிலியத்தின் அருகில் மாணவர் பிரநிதிகள் நான்கு பேர் நிற்பர். முதல் நபர் திருவிவிலியத்தைத் தொட்டு நெற்றியில் தம் கைகளை வைப்பார். அப்போது "இறைவா உமது வார்த்தையால் எனது நினைவுகளைத் தூய்மையாக்கும்" என்பார். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் அப்படியே செய்வர். இரண்டாவது நபர் விவிலியத்தின் மீது தம் கைகளை வைத்து கண்களில் ஒற்றி "ஒளியான வார்த்தையே இறைவா எனது கண்களால் நல்லவற்றையே காண ஒளிதாரும்" என்பார்.

மூன்றாம் நபர் வாயில் தம் கைகளை வைத்து "உண்மையான வார்த்தையே இறைவா எப்போதும் நான் உண்மையே பேசிட உமது உண்மையின் வார்த்தைகளால் என்னை நிரப்பும்" என்பார்.

நான்காம் நபர் நெஞ்சில் கைகளை வைத்து "அன்பின் நிறைவான வார்த்தையே இறைவா! உமது வார்த்தையினால் என்றும் என்னோடு தங்கியிருந்து நான் அன்பில் வளர்ந்தோங்கச் செய்வீராக" என்பார்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

யோவான் 21:1-19

### 8. இறைவார்த்தை விளக்கம்

- இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின் சீடர்கள் செய்வதறியாது திகைத்தனர்.
- எனவே பேதுருவின் தலைமையில் மீண்டும் மீன்பிடிக்கச் சென்றனர்.
- இரவு முழுவதும் உழைத்தும் மீன் கிடைக்கவில்லை.
- காலை வேளையில் இயேசு கடல் அருகே நின்று வலது புறம் வலையை வீசச் சொன்னார்.
- வலை கிழிந்து போகும் அளவிற்கு ஏராளமான மீன்கள் கிடைத்தன.
- கரையில் நிற்பவர் இயேசு என்று சீடர்கள் கண்டு கொண்டனர்.

◆ இயேசு பேதுருவிடம், “என் ஆடுகளை மேய்” என்றார்.

◆ இயேசுவின் குரலைக் கேட்ட பேதுரு திரு அவையை வழிநடத்தும் பொறுப்பேற்றார்.

## 9. உய்த்துணரச் செய்தல்

★ எனது வாழ்விலும் இயேசுவின் குரல் ஒலிக்கிறது.

★ இயேசுவின் குரலுக்குச் செவிமடுத்து வாழ்வேன்.

## பாகம் - உ கலை வழிப் பயிற்சி

### 1. புதிர்கள்

1. கபடமில்லா உள்ளம்; முந்திரிக்கொட்டைப்போல் முந்துபவர்; மூன்றெழுத்து உள்ளவர்; இயேசுவுக்குப் பக்கபலம் ஆனவர் அவர் யார்? **(பேதுரு)**
2. தலையிலே பெரியத் தலை அது எந்தத் தலை? **(விடுதலை)**
3. கதையிலே சிறந்த கதை அது என்ன கதை? **(விடுகதை)**
4. இரு குதிரைகள் மீது ஒரு ராசா அது என்ன? **(மிதியடி)**
5. வாழ்ந்தால் அவருக்காக; யார் அவர்? இறந்தால் எனக்கு அது என்ன? **(கிறிஸ்துவுக்காக, ஆதாயமே)**
6. எல்லாருக்கும் கிடைக்காத மதி; எல்லாரும் விரும்பும் மதி அது என்ன? **(நிம்மதி)**
7. போனால் திரும்பி வராது அது என்ன? **(உயிர்)**
8. குளம்படி சத்தக்காரன்; போருக்குக் கெட்டிக்காரன் அவன் யார்? **(குதிரை)**
9. மகிழ்ச்சியாக இருக்கும் போது நம் வாயெல்லாம் இருக்கும் பூ. அது என்ன பூ? **(சிரிப்பு)**
10. உயர்ந்தவர் - எதார்த்தமிக்கவர், முந்திரிக்கொட்டை குணமுள்ளவர்; பெரியவரானார் அவர் யார்? **(புனித பேதுரு)**

### 2. விளையாட்டு

**மெசியா** என்று கூறும்போது வலது கையை உயர்த்தி இரண்டு விரலை நீட்டிக் காட்டுதல்.


**நண்பன்** என்று கூறும்போது ஒருவர் ஒருவருக்கு கை கொடுத்தல்.

**போதகர்** என்று கூறும்போது தனி நபராக ஒரு கையை நீட்டி ஆசி கூறுதல்.


தொடர்ந்து கூறும்போது சைகையை மாற்றிச் செய்பவர் அவுட் ஆகி விடுவர்.




### 3. படத்தைப் பார்த்துப் பெயர் எழுது



1



4



2




3

1.
2.
3.
4.


**3. இப்படத்திற்கு வண்ணமிடவும்.**

பொருத்தமான இறைவாக்கு எது? யோவா 21:18





**4. இப்படங்களுக்கு வண்ணமிடவும்.**



# ஆயரின் ஆசியுரை

"விவிலியத்தை அறியாமல் இருப்பது கிறிஸ்துவையே அறியாமல் இருப்பதாகும்" என்றார் புனித எரோணிமு.

"விவிலியத்தைப் படித்தறிய கிறிஸ்தவர்களுக்கு அதிக வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும்" என்று அறிவுறுத்துகிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (காண்க : இறைவெளிப்பாடு எண் 22).

பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் இறைவாக்கினர் வாயிலாகப் பேசிய கடவுள், "இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்" (எபி 1:1-2). என்றும் வாழும் இறைவாக்காகிய அவருடைய மகன் எல்லா மனிதருக்கும் ஒளியாய் இருக்கிறார். அவர் மக்களிடையே வாழ்ந்து தம் உள்ளார்ந்த உண்மைகளை அவர்களுக்கு எடுத்துரைக்கும்படி (காண்க: யோவா 1:1-18) கடவுள் அவரை அனுப்பினார். ஆகவே மனிதரான வார்த்தையும் "மனிதருக்காக" அனுப்பப்பட்டவருமான இயேசு கிறிஸ்து "கடவுளின் வார்த்தையைப் பேசுகிறார்" (யோவா 3:34); தந்தை அவருக்கு அளித்த நிறைவாழ்வுப் பணியை நிறைவேற்றுகிறார் (காண்க : யேவா 5:36; 17:4). இயேசு கிறிஸ்துவைக் காண்பது தந்தையைக் காண்பதாகும் (காண்க: யோவா 14:9) (எண் 4) என்றார்.

ஆகவே, மனித குல வாழ்வுக்கு ஒளியும் வழியும் உண்மையுமான இயேசு கிறிஸ்துவை இன்னும் ஆழமாய் அறிவதற்கு தூய ஆவியின் துணையுடன் இறைவார்த்தையை நாட வேண்டும். "திருச்சபை நம் ஆண்டவரின் திருவுடலுக்கு (நற்கருணை) வணக்கம் செலுத்துவது போலவே விவிலியத்திற்கும் என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது" (எண் 21) என்பதையும் உணர்ந்து கிறிஸ்தவ அருள் வாழ்வில் இறைவார்த்தைக்கு உரிய இடத்தைத் தரவேண்டும்.

**விடுமுறை விவிலியக் கல்வி** (VBS) என்னும் இச்சிறப்பான திருப்பணி நமது குழந்தைகள் இறைவார்த்தையின் ஆற்றலைக் கண்டுணர பெரிதும் துணைபுரிகிறது. இதை உருவாக்க உழைத்தவர்களையும் மேலும் இதைப் பயன்படுத்திக் கற்றுக்கொடுக்கும் தன்னார்வப் பணியாளர்களையும், பயன்பெறும் சிறுவர், சிறுமியர், இளையோர் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இயேசுவில் அன்புள்ள,
**+ செ. சூசைமாணிக்கம்**
*சிவகங்கை ஆயர்*
தலைவர்,
தமிழக விவிலியப் பணிக்குழு

19 மார்ச்
புனித யோசேப்புப் பெருவிழா

# நன்றியுரை

கோடை காலம். எல்லாருக்கும் விருப்பமான காலம் இது. ஆண்டு முழுவதும் படிப்பு, வேலை என்று பம்பரமாய்ச் சுற்றிவந்த அனைவருக்கும் சற்று ஓய்வு தரும் காலம். ஒவ்வொரு ஆண்டும் படிப்பை முடித்துவிட்டு மாணவச் செல்வங்கள் பல்வேறு இடங்கள் செல்வதும் பல்வேறு காரியங்களில் ஈடுபடுவதும் வழக்கம். கோடை விடுமுறையில் நமது கிறிஸ்தவக் குழந்தைகள் உல்லாசமாய்த் திரிந்து பொழுதைப் போக்காமல் மிகவும் பயனுள்ள முறையில் அதை செலவழிக்கும் பொருட்டும், விவிலியத்தை முழுவதும் அறிந்து கொள்ளும் பொருட்டும் உருவாக்கப்பட்டதே **"விடுமுறை விவிலியக் கல்வி"** (VBS) என்னும் உயரிய திட்டம்.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆங்காங்கே தொடங்கப்பட்டு நடத்தப்பட்ட இக்கோடைகால விவிலிய வகுப்புகள், ஆலமரமாய் வளர்ந்து இன்று தமிழகம் முழுவதற்கும் பயனளிக்கும் **விடுமுறை விவிலியக் கல்வி**த் திட்டமாக உருவெடுத்துள்ளது.

இக்கல்வி இந்த அளவு வளர்வதற்கு பலரும் இதன் பின்னணியில் இரவு பகலாக உழைத்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் நன்றிப் பெருக்கோடு நினைவு கூறுகிறோம். மிகக் குறிப்பாக தமிழக விவிலியப் பணிக்குழுவில் செயலாற்றிய அருள்தந்தையர்கள் வ.மரியதாசன், பீட்டர் அபீர், ஜோமிக்ஸ், பூவிருந்தவல்லி, புனித பவுல் விவிலிய நிலையத்தில் தங்கி ஓராண்டு விவிலியம் பயின்று வெளிவந்த முதல் குழு வேதியர்கள், அருள்பணி. இரா. மரிய டெல்லஸ், விவிலியத்தில் ஆர்வமுள்ள பல்வேறு தந்தையர்கள், இவ்வரிய பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிப் பாடநூல் என்ற உருவாக்கம் கொடுத்தவர்கள் என பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். இவர்களின் உழைப்பு விலைமதிப்பற்றது. இவ்வுழைப்பு சிறுவர்களுக்கான விவிலிய மற்றும் மானிட உருவாக்கத்தில் வரலாற்றுத் தடயத்தைப் பதித்துள்ளது என்றால் மிகையாகாது.

கடந்த 2003-ஆம் ஆண்டு முதல் அனைத்து மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுச் செயலர்களின் பரிந்துரையை ஏற்று, விடுமுறை விவிலியக் கல்விக்கான (VBS) துணைக்கருவிகள் தயாரிக்கும் பொறுப்பை தமிழக விவிலியப் பணிக்குழு ஏற்று செய்து வருகின்றது. துணைக்கருவிக்கான பாடநூல்களை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை சிறப்பாக முப்பணி மையம் செய்து வருகின்றது. இன்று நம் கையில் கிடைக்கப்பெறும் துணைக் கருவிகள் உருவாக பலரும் உதவியுள்ளனர். அவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவுகூற விரும்புகிறோம். மிகக் குறிப்பாக அருள்சகோதரி பெரேரா, P.நெல்சன், வேதியர்கள் திரு. T. தாமஸ், திரு. T.M. சந்தியாகு, வேதியர் S. இருதயசாமி, பேராசிரியர் திரு. ஜோ. பீட்டர் ராஜா, திரு. ஆரோக்கியசாமி, திருமதி. ரெஜினா மேரி, திரு. டொமினிக், செல்வி அமலா மிசாயேலா, கணினியில் பதித்த திருமதி. மேரி ஸ்டெல்லா, ஓவியர் திரு. நிர்மல், பாடல்கள் உருவாகிட உதவியவர்களுக்கும் மற்றும் இசை அமைப்பாளர் ஆகியோருக்கும் உளம் கனிந்த நன்றி.

விடுமுறை விவிலியக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்ட காலந்தொட்டே இப்பணியில் ஈடுபட்டு மாநில அளவில் செயலாற்றி உழைத்த முன்னாள் விவிலியப் பணிக்குழு செயலர்கள் அனைவருக்கும் அச்சிட்டு பரவலாக்கும் பணிகளைத் திறம்படச் செயல்படுத்தும் அருள்பணி. ம. பிலோமின்தாஸ் இயக்குநர் அவர்களுக்கும் நன்றிகள் பல.

இறைவாக்குப் பணியில் தந்தையின் கரிசனையோடு எப்பொழுதும் ஆதரவளித்து ஊக்குவிக்கும் தந்தையின் உள்ளம் கொண்ட தமிழக விவிலியப் பணிக்குழுவின் தலைவர், **சிவகங்கை ஆயர் மேதகு சூசை மாணிக்கம்** ஆண்டகைக்கும் எம் இதயம் நிறைந்த நன்றி.

இயேசுவின் காலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவரிடம் அழைத்து வந்தனர். ஆசிரைப் பெற்றுக்கொண்டனர். அதுபோல நாமும் நம் குழந்தைகளை அழைத்து வருவோம்.

முப்பணி மையம்
திண்டிவனம்
2017

***அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்***
*பொதுச்செயலர்*
*தமிழக விவிலியப் பணிக்குழு*